# பிரதமர், நாகநாதன், சிவசிதம்பரம் ஒரே மேடையில்

## நீர்கொழும்பில் தேர்தல் பிரசாரம்

கொழும்பு, திங்கள்

நீர்கொழும்புத் தொகுதி உபதேர்தலில்முதலதடவையாக தமிழ்அரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனும், தமிழ்க் காங்கிரஸ் பிரமுகரும் வவனியா எம். பி. யுமான திரு. ரி. சிவசிதம்பரமும் கலந்துகொண்டு ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர் திரு. டென்ஸில் பெர்ணன்டோவை ஆதரித்துப் பேசினர்.

நீர்கொழும்பில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி

[6-ம் பக்கம் பார்க்க[

...gistered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தந்தி மேல்விலாசம் எண் : 49
போன் 689

National Tamil Daily

மலர் 9
இதழ் 150
தேசிய தினசரி

ஆனி 27 ரபி ஆகி. 2 செவ்வாய்க்கிழமை [11-7-67]

# மட்டக்களப்பின் முதல் மேயர்: இராசதுரை (எம்.பி.) தெரிவு

## சின்னலெப்பை துணை மேயரானார்

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு நகரின் முதலாவது மேயராக திரு. செ. இராசதுரை தெரிவுசெய்யபபட்டார். மட்டக்களப்பு முதலாவது எம். பி.யும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. இராசதுரை மட்டக்களப்பின் முதலாவது மேயராகத் தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவியத்தொடங்கின.



மட்டக்களப்பு நகரின் முதல் துணை மேயராக மட்டக்களப்பு தொகுதியின் இரண்டாவதுஎம் பி. ஜனாப் லத்தீப் சின்னலெப்பை தெரிவுசெய்யப்பட்டார்.

மேயர் பதவிக்கு திரு. இராஜதுரையுடன் முன்னாள் நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கமும், முன்னாள் உப தலைவர் திரு. ஆர். கதிரவேலுவும் போட்டியிடுவதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் திரு. இராசதுரையும் பிரபல நகை வியாபாரியான திரு சா. வள்ளிச்சாமியுமே மேயர் பதவிக்குப் போட்டியிட்டனர்.

பத்தொன்பது அங்கத்தவர்களைக் கொண்ட மட்டக்களப்பு மா நகரசபையில் திரு. இராசதுரைக்குப் பன்னிரண்டு வாக்குகளும் திரு. வள்ளிச்சாமிக்கு ஏழுவாக்குகளும் கிடைத்தன. திரு. இராசதுரை மேயராகத் தெரிவு செய்யப்பட்டதாகக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த ஆணையாளர் திரு. ஜே. ஜே சி. தம்பிநாயகம்அறிவித்தார். இதன் பின் துணை மேயர் தேர்தல் நடைபெற்றது. ஜனாப் சின்னலெப்பை துணை மேயராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

மேயர், துணை மேயர்தேர்தல் முடிந்ததும் இருவரும் தமதுஆதரவாளர்களால் நகரின் முக்கிய வீதிகள் வழி ... ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மராஜா மரணம்

## சந்தேக நபர்கள் இன்று கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், செவ்.

ரயிலில் மரணமான தர்மராஜாவின் மரணம் சம்பந்தமாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சிவபாதம், சிவஞானம் ஆகிய இருவரும் இன்றுவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். வடபகுதிபொலிஸ்சுப்ரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் உத்தரவைத்தொடர்ந்து சங்கானைப் பொலிசாரால் சந்தேக நபர்களான இவ்விருவரும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இன்றுவரை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இன்று நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்செய்யப்பட்டதும், இவர்கள் இருவரது வாக்குமூலங்களும் பதிவு செய்யப்படும். தர்மராஜாவின் மரணம் சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டுவரும் மற்றொரு சந்தேக நபரான, மரணமான தர்மராஜாவின் மனைவியெனச் சொல்லப்படும் தங்கம்மாவை விசாரணைசெய்வதற்காகச் சங்கானைப் பொலிஸ்இன்ஸ்பெக்டர்திருடயஸ் இன்று மாலை கம்பளை செல்லவிருப்பதாகத் தெரிகின்றது. பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்துவருகின்றனர் [ந. நி]

## தேர்தல் ஆள்மாருட்டவழக்கில் எதிரிக்கு அபராதம்

சாவகச்சேரி, திங்கள்

பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பின்போது தகாத முறையில் தமது வாக்குரிமையைப் பிரயோகித்த ஒருவருக்கு ரூபா 150 அபராதம் அல்லது ஆறுவாரக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டுமார்ச் 22-ம் திகதி நடைபெற்றதேர்தல் வாக்களிப்பின் போது சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கிளிநொச்சியில் பி. திருஞானம் என்பவர்என். எஸ். சேதுகாவலர் என்பவருக்காகத் தனது வாக்குரிமையைத் தகாத முறையில் பிரயோகித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. வழக்காளி தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் வழக்கை நடாத்தினார். எதிரி தரப்பில் புரக்டர் திரு. சி. பாலகிருஷ்ணன் ஆஜரானார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசுவாமி எதிரிக்கு 150 ரூபா அபராதம் விதித்து அதைக் கட்டத்தவரின் 6 வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிட்டார்.

## 'தெருசசுற்றும் வாலிபர் பற்றி பொலிஸாருக்கு அறிவியுங்கள்'

### மாணவர்சங்கக் கூட்டத்தில் பொலிஸ் சுப்பிரீண்டன்ட் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இன்று நாட்டில் நிகழும் அநேகமான குற்றச் செயல்களிலும் இளைஞர்களே முக்கிய பங்குகொண்டுள்ளதை பொலிஸ் புள்ளிவிபரங்களிலிருந்து அறியக் கூடியதாகவிருக்கின்றது. இளைஞர்கள் பழகும் சூழலே இதற்கு முக்கியமான காரணமாக அமைகின்றதெனலாம். நல்லதொரு வாலிபனை உருவாக்கும் பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியரதும் முக்கியமான கடமையாகும். இதற்குத் தகுந்த இடம் பாடசாலைகளே"

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற மாணவர ...

(6-ம் பக்கம் பார்க்க)

அனுராதபுரம்

## கதிரேசன்கோவில்கிணற்றில் அழுகிய நிலையில் சடலம்

அநுராதபுரம், திங்கள்

அநுராதபுரம் பழைய நகரிலுள்ள கதிரேசன் கோவில் கிணற்றில் ஆணின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சடலம்அழுகிய நிலையில் காணப்பட்டது.

நேற்று முன்தினம் பொலிசார் அக்கிணற்றைக் காவல செய்தனர். நேற்றுச் சடலம் கிணற்றிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டது.

இச்சடலம் அடையாளம் கண்டுபிடிக்கப்படாமலே அடக்கம் செய்யப்பட்டது. அடக்கம் செய்யப்படுமுன் வைத்திய பரிசோதனையும் விசாரணையும் நடந்தது.

அநுராதபுரம் பொலிசார் இச்சடலம் சம்பந்தமாகத் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

கந்தரோடை

## வியாபாரநிலையமாகவே இருந்திருக்க வேண்டும்

### இரு இடங்களில் 36,000 மணிகள், நாணயங்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

கந்தரோடை முன்னொரு காலத்தில் புத்த பிக்குகளின் சமாதிகளைக் கொண்ட பகுதியாக இருந்ததா அல்லது பிரபல வியாபார நிலையமாக இருந்ததா இப்படியொரு பிரச்னை தறபோது எழுந்துள்ளது.

முன்னாள் புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர் பேராசிரியர் எஸ். பரணவித்தான இது புத்தபிக்குகளின்சமாதிகளைக்கொண்ட பகுதியாக இருந்திருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். ஆனால் கந்தரோடை ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள் இவரின் கூற்றுக்கு மாறுகவிருக்கின்றதாம்.

கந்தரோடையில் சுமார் 90 குழிகள் தோண்டப்படு ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இவற்றுள் இரண்டு இடங்களில் மாத்திரம் 36,000 மணிகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரே இடத்தில் இவ்வளவு தொகையான மணிகள் எப்படி வந்ததெனப் புதைபொருளாராய்ச்சி உத்தியோகத்தர்கள் சிலர் ஆச்சரியமடைந்துள்ளனராம்.

புத்த பிக்குகளின் சமாதிகளைக் கொண்ட பகுதியா இருந்திருந்தால் பழைய நாணயங்கள், விலையுயர்ந்த மணிகள் எப்படி அங்கு ... திருக்கலாம் என்ற பிரச்னை எழுந்துள்ளது. இதையிட்...

(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்**

எதையும் பெற வேண்டுமென்று ஆவல் கொள்ளாதீர்கள். மனதையும் எண்ணத்தையும் கட்டுப்படுத்துங்கள். உங்கள் செய்கைகளினால் பாவத்தைச் செய்ய முனையாதீர்கள்.
— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு
...nadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

... பிலவங்க ஆனி மீ 27உ (11-7-67)

## மட்டக்களப்பு மாநகரசபை

மட்டக்களப்புத் தொகுதியின் முதலாவது, இரண்டாவது எம். பி.க்கள் இருவரும் மட்டக்களப்பு நகரின் முதல் மேயராகவும் துணைமேயராகவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். மட்டக்களப்புத் தொகுதியின் நலனைக் கவனிக்கும் பொறுப்பை மட்டுமல்லாது நகரை அபிவிருத்தி செய்யும் பொறுப்பையும் கூட திரு. இராசதுரையிடமும், ஜனாப் சின்னலெப்பையிடமும் மட்டக்களப்பு மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். நகரின் அபிவிருத்திக்கு நகரின் முதல்வர்கள் எடுக்கும் எந்த முயற்சிக்கும் அந்த நகரை உள்ளடக்கிய தொகுதியின் பார்லிமெண்ட் பிரதிநிதியின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம். இந்த உதவியும் ஒத்துழைப்பும் பல நகர முதல்வர்களுக்கும் சுலபத்தில் கிடைப்பதில்லை. இப்பிரச்னை மட்டக்களப்பு நகர மேயருக்கும் துணைமேயருக்கும் இல்லை. இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கும் திரு. இராசதுரையும் ஜனாப் சின்னலெப்பையும் மக்கள் தங்கள்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பூரணமாக நிறைவேற்றுவார்களென எதிர்பார்ப்போம்.

கிழக்கிலங்கையின் முதலாவது மாநகரசபையின் முதலாவது மேயராகவும் முதல் துணை மேயராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. இராசதுரையையும் ஜனாப் சின்னலெப்பையையும்வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம்.

மேயர் தேர்தலில் போட்டியிருந்த போதிலும் தேர்தலின் போட்டிக்கு இடமிருக்கக் கூடாது. மேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. இராசதுரையும் உதவிமேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாப் சின்னலெப்பையும் எந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருப்பினும் மேயராகவும், துணைமேயராகவும் பதவியேற்றபின் கட்சி வேறுபாடுகளுக்கு இடமளிக்கமாட்டார்களென்று நம்புகிறோம். கட்சி வேறுபாடுகளும், கோஷ்டி மனப்பான்மையும் நகருக்கோ, மக்களுக்கோ எவ்வித நன்மையும் அளிக்கமாட்டாதென்பதையும் மக்களின் நம்பிக்கையை இழந்துவிடவே அவை வழிவகுக்குமென்பதையும் மட்டக்களப்பு மேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் தெரிந்திருப்பர். யாழ்ப்பாண மாநகரசபையின் கடந்த காலச் சம்பவங்களும் அனுபவங்களும் மட்டக்களப்பு மாநகரசபை அங்கத்தினர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மட்டக்களப்பு நகரம் துரித முன்னேற்றமடைந்து மட்டக்களப்பு மக்களுக்கும்நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தர வேண்டும். புதியமேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் இதை நிறைவேற்றுவார்களென நம்புகிறோம்.

# மழலைக் குழவியும் மணிவாசகரும்

— பொ. கிருஷ்ணன் —

கவிஞரும் தத்துவ ஞானிகளும் குழந்தைகள் மீது பேரன்பு பூண்டொழுகும் இயல்பினர். குழந்தைகளிடம் தெய்வீகத் தன்மையிருப்பதைத் தெள்ளிதாகக் காண்பர், அன்னார். நம் நாட்டிலே ''குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே'' என்னுமோர் பழமொழி வழங்கி வருகின்றது. குழந்தைகளிடம் அன்பு பூண்டு கொஞ்சு மொழிபேசினால் அவர் நம் வயமாவார். உள்ளன்புடன் பூசித்துக் கொண்டாடிவரின் தெய்வத்தின் சாந்நித்தியமும் பூரணமாக வெளிப்படும். பெரியோர் சரிதங்களாலும் எம் அனுபவத்தாலும் இது உண்மையாதலை நாம் அறிகின்றோம். நேருவும் காந்தியும் குழந்தைகள் மீது காட்டி வந்த பேரன்பு நாமெல்லோரும் அறிந்தவொன்றே. குழந்தையை திருக்கோவையாரில் நடைமணி என்று காட்டுகின்றார் மாணிக்கவாசகர். மாணிக்கம்எல்லோரும் பெரிதாக மதிக்கும் சிறப்பு வாய்ந்ததொன்று. எனினும் அஃது உயிரற்ற அஃறிணைப்பொருள். அதற்கு உயிரும் இருக்குமாயின் அதன் பெறுமதி தான் நவிலும் தரத்தாகுமோ? குழந்தையை நடைமணி என்ற மாணிக்கவாசகரின் வாக்கு அப்படியே நம் உள்ளத்தைக் கவருகின்றது. அக் குழந்தையைப் பிறிதுமோர் இடத்தில் திருக்கோவையாரில் தலைமகன் கூற்றில் வைத்து மணிவாசகனார் ''மன்னுகுதலையின் வாயான் வள்துறை தருமாலமு தன்னவன்'' என்று அருமையும் பெருமையும் புலப்பட உரைக்கின்றார் நிரம்பாத மெல்லிய இன்மொழி சொரிகின்ற வாயையுடையவன், பாற்கடலின் வளவிய துறையானது கொண்டு தந்த பார்ப்பாருக்கும் கேட்பாருக்கும் மயக்கத்தைச் செய்யும் அமுதத்தை ஒத்தவன் என்ற கருத்துப்பட எம் உளங்களையும் வகை கடவுளைப் போற்றும் வாயால் குழந்தையையும் ஏற்றம் பெறக்காட்டுகின்றார் இப் பெரியார்.

இளம் கிளி மூலமாகவும் குயில் மூலமாகவும் இறைவன் பெரும் புகழை எடுத்து விள்ளும் மணிவாசகரும் அவற்றில் சிறுபராயத்தனவற்றை விளித்து, ''ஏரார் இளங்கிளியே'' என்றும் ''தேன்பழச் சோலையிலுஞ் சிறுகுயிலே'', ''வா இங்கே நீகுயிற் பிள்ளாய்' என்றும் எத்துணை அருமைப் பாடமைந்த சொற்களால் அவற்றைச் செல்லமாக அழைக்கின்றார். குணங்குறி கடந்து மாற்றத்திற்கும் மனத்திற்கும் அப்பால் ஒளிரும் சிவன் பெருமையை தமக்கு வெளிப்படுத்துமாறு கேட்பார் போல கோவிலின் பாங்கரில் உலவும் சிறு பெண் குழந்தைகளை நோக்கி, ''கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள் ஏதவனூர்? ஏதவன் பேர்? ஆருற்றார்? ஆராயலார்? ஏதவனைப் பாடும் பரிசேலோரெம்பாவாய்'' எனக் கேட்கின்றார். [திருவெம்பாவை 10 ஆம்திருப்பாடல்] வளர்ந்தோர் குளிரென்று நடுங்கும் மார்கழிமாதத் திருவெம்பாவைப்போது அதிகாலையில் இறைவன் கோவில் மருங்கு துள்ளிக் குதித்து அவன் புகழ்பாடும் இளம் பெண் குழந்தைகளை துள்ளிக்குதிக்கும் மானிளம் கன்றுகளாக உருவகித்து கூறும் சிறப்பு பாவை ஓதுவார் உளத்தைஅருளொழுகும் முறையில் மெல்லெனத்தீண்டுகின்றது. குழந்தைகளிடம் இலங்கும் தெய்வத் தன்மையால் அவர்கள் இறைவனியல்பை வளர்ந்தோருக்கும் எடுத்து [திருஞானசம்பந்தர் பாலறுவாயரைப்போல] இயம்பும் பான்மையை அருமைசிறக்க அன்னைப்பத்தில் அடிகளார் அழகொழுகு செந்தமிழில் காட்டுகின்றார். இந்த அன்னை பத்தை, ''ஆங்கொரு சிறுமி தன்சீர் அன்னையை நோக்கிக் கூறும் தாங்கிசை மொழி என்பர் வாதவூரடிகள் புராணமுடையார். அந்த அன்னைப்பத்தின் உட்பொருள் ஆத்தும பூரணம் எனப்படுகின்றது. குழந்தை சிவநிறைவினால் நிறைந்து அவனோடு ஐக்கியம் பெறுதலாகிய பூரண நிலையை அஃதுஅருமை பெறக் குறிப்பிடுகின்றது.

### அன்னைப் பத்தாம் அரும்பெறல் வாசகம்

நாததத்துவத்தை இயக்கி ஓசை, ஒலியெல்லாம் கிளரச் செய்து அந் நாதத்தினின்று பிறந்த வேதத்தை ஓதும் இறைவனாரை ''வேதமொழியர்.... இந்தோதனார்... அன்னே என்னும்'' என்று முதலாம் திருப்பாடலில் குழந்தை தன் அன்னைக்குக் காட்டுகின்றது. அடுத்த திருப்பாடலில் இறைவனது கருணைப் பெருக்கை ''கண்ணஞ்சனத்தவர்.., உலப்பிலா ஆனந்தக் கண்ணீர் தருவரால்'' என்று குழந்தை காட்டுகின்றது. மூன்றும் திருப்பாடலில் அப்பிரானை என்றும் அழகியதிருக் கோலத்துடன் வெளியிலன்றியும் உள்ளத்தின்கண்ணும் உறைபவராக காட்டுகின்றது. நான்காம் பாடலில் உள்ளும் புறம்பும் நிறைந்து இலங்கும் பெருமானை எளியவரில் எளியவராக பாம்பாகிய பூணும் புலித்தோலாடையும் வெண்பொடிப் பூச்சும் உடையவராக எளிமையும் முதன்மையும் பொருந்தியவராக [உலகமெல்லாம் வெந்து சாம்பராக அப்பொடியைப் பூசியஅழிவிலா முதல்வராக]க் காட்டுகின்றது. அடுத்து வரும் திருப்பாடலில் உலகெங்கும்நிறைந்த பெம்மானை பாண்டிநந் நாட்டுப் பெருந்தெய்வமாக அடியாழிக்கு வேண்டியன உவந்தளிக்கும் பெருவள்ளலாக நீண்ட கரத்தர் என்ற சொற்றொடரால் அவர் ஆண்டு, அன்பு செய்யும் முறையை அன்னைக்குக் குறிப்பிடுகின்றது. இத்தகைய பெருவள்ளலார் ஒவ்வொருவர் உள்ளத்தும் கோவில் கொண்டெழுந்தளியிருக்கவும் அவரை உள்ளே தேடிக் காணாத அயன், மால் இருவரது மயக்கத்தை அதிசயத்தோடு வெளிப்படுத்துகின்றது. உள்ளிருக்கும் அப்பெருமானே புறத்தேயும் நீண்டசட்டை [குப்பாயம்] அணிந்து பரிமேலழகராக எழுந்தருளிவரும் உளம் கவரும் தன்மையை எம்முள்ளம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கக் காட்டுகின்றது. தம்மை நாடாதோரையும் தாமே நாடி வந்து காணச்செய்யும் அவர் திருக்கோலத்தையும் அவர் கையிலிருந்து ஓசையெழுப்பும் திருத்தாளவாயிலாக'' அடிகளார் தங்கையில் தாளமிருந்தவா றன்னே என்னும்'' என்று [illegible] காட்டுகின்றது. ஒன்பதாம் திருப்பாடலில் இறைவன் திருவிளையாடற் சிறப்பை அவன் மாறுபட்ட ஒழுக்கத்தின் மூலம் நம்முள்ளம் நைந்துருகுமாறு காட்டுகின்றார். குழந்தையின்வாக்கில் அடிகளார். அவர் அம்மையாரை இடப்பாகத்தில் வைத்திருக்கும் இல்லறவாசியாக இருந்தும் தவத்தர் வேடத்துடன் திரிகின்றார். அந்த மென்மை வாய்ந்த அம்மையாரோடும் [ஆன்மாக்கட்கு அருள் செய்ய] பிச்சை கேட்டு வீடெல்லாம் திரிந்து தன்னுள்ளத்தையும் நையச் செய்கின்றார் என அத்திருப்பாடலில் குழந்தை காட்டுகின்றது.

### பிச்சியாகிப் பூரண நிலை எய்தல்

இறைவனே பித்தன் பித்தனென்ற சமயகுரவர் நால்வராலும் பேசப்படுகின்றான் [தாய் குழந்தை மீது] வைக்கும் எல்லையற்ற அன்பினால் பைத்தியகாரிபோலத் தோற்றும் பான்மையில், ஆன்மாக்கள் உய்யவேண்டும் என்ற இறைவன்பெருங் கருணைத் திறனே இங்கு பித்து எனப்படுகின்றது. ஓங்கார வடிவான மகரந்தத் தாள் தாங்கிய கொன்றைப் பூவும் அவனுடைய முக்கண்ணை நினைவூட்டும் முப்பகுதி கொண்ட வில்வத் துளிரும் மிளிர தனது திருமுகமண்டலத்தை இறைவன் குழந்தைக்குக் காட்டுகின்றார். அவனுடைய தலையில் மதிக்கீற்றின் பக்கலில் ஊமத்தை மலர் அழகுற மிளிருகின்றது. அவனுடைய ஊமத்தம்பூ தனக்கு உன்மத்தம் தருவதாகக் குழந்தை கூறி அவன் திருவுருவால் முழுதும் கவரப்பட்டு அவனுக்கே பிச்சியாகி அவன் தாளிணைக்கே சேரும் பிரிவிலாப் பூரண நிலை 10 ஆம் திருப்பாடலில் குறிப்பிடப்படுகின்றது. இப்படி மழவிளங் குழந்தை மூலம் பெரும் சமயதத்துவத்தை விளக்கும் மணிவாசகனார் செந்தமிழை ஓதி உய்திபெறல் செந்தமிழர் கடனாகும்.

## நாட்டிலும நகரிலும்

நீர்கொழும்பு நாடாளுமன்றத் தொகுதியில் நாளை மறுதினம் இடைத்தேர்தல் நடக்கப்போகிறது. இத்தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. குவெண்டின் பெர்னாண்டோ மரணமடைந்ததைத் தொடர்ந்து இந்த இடைத் தேர்தல் நடக்கிறது. இம்முறை ஒரு யூ.என்.பி. காரரும்ஒரு சுதந்திரக்கட்சிக் காரரும் நான்கு சுயேச்சையாளரும் போட்டியிடுகிறார்கள்.

இத்தொகுதியில் நூற்றுக்குக் கிட்டத்தட்ட 98 வீதம் பேரும் கத்தோலிக்க சமயத்தைச்சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களுடையவாக்குகளைப் பெறுவதற்கு நமது அரசியல் தலைவர்கள் தங்கள் வழக்கமான தந்திரங்களை உபயோகிக்கிறார்கள்.

தேர்தல் கூட்டங்களில் வேறு பேச்சே இல்லாமல் ஒரே பல்லவியைத்தான் எல்லோரும் பாடுகிறார்கள். 'கத்தோலிக்க பள்ளிக்கூடங்களை அரசாங்க பள்ளிக்கூடங்களாக்கியதுசுதந்திரக் கட்சியே' என்று யூ. என். பி. பிரசாரம் செய்கிறது. 'நாங்கள் கத்தோலிக்க பள்ளிக்கூடங்களை மட்டும் எடுக்கவில்லை, பௌத்த, இந்து பள்ளிக்கூடங்களையும்தான் எடுத்தோம். நீங்கள் பதவிக்கு வந்தபின் கத்தோலிக்க பள்ளிக்கூடங்களை ஏன் திருப்பிக் கொடுக்க வில்லை?' என்று மறுத்தான் விடுகிறது சுதந்திரக்கட்சி.

அத்தோடு வாதப் பிரதிவாதங்கள் நின்றுவிடவில்லை. 'போயா தினங்களை விடுமுறை யாக்கியதன் பயனாக கத்தோலிக்கரின் வழமையான வழிபாட்டு நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை அவர்களிடமிருந்து பறித்து விட்டீர்கள்' என்று சுதந்திரக் கட்சி யூ என். பி.யின் மீதுகுற்றம் சுமத்தியது.

யூ. என். பி. சும்மாயிருக்குமா?

சிலநாட்களுக்குமுன்பு ஒரு யூ என். பி. தலைவர் 'ஞாயிற்றுக்கிழமையையும் போயா தினத்தையும் விடுமுறை தினங்களாக்க அரசாங்கம் ஆலோசித்து வருகிறது' என்று கூறினர்.

இப்படியே இந்த இடைத் தேர்தல் பிரசாரம் முழுவதும் 'கத்தோலிக்கருக்கு அது செய்வோம், இதுசெய்வோம்' என்ற தொனியிலேயே போய்க்கொண்டிருக்கிறது.

இதில் ஒரு புதினம் என்னவென்றல், நீர்கொழும்பிலுள்ள கத்தோலிக்க குருமார்களில் ஒருவராவது வாய்திறந்து எந்த கட்சிக்காகவும் பிரசாரம் செய்ய முன்வரவில்லை. வாக்காளரிடையே பரிபூரணசெல்வாக்குள்ள இவர்கள் ஏன் இப்படி மௌனம் சாதிக்கிறார்கள் என்பது இப்பொழுது தான் புலனாகிறது.

அரசியல் வாதிகள் மதத்தை ஒரு விளையாட்டுப் பொம்மைபோல, தங்கள் சொந்த லட்சியங்கள் நிறைவேறுவதற்காக, உபயோகித்துவருவதைக்கண்டு குருபீடம் மனம் புழுங்குகிறது. அவர்களுக்கு இதெல்லாம் 'சீ' என்றே போய்விட்டது.

'தேர்தல் களத்தில் அரசாங்கங்களின் சாதனைகளையும்பிரச்னைகளையும்வைத்தே போராடவேண்டும். மதத்தை இதற்குள் இழுக்கப்படாது' என்று இலங்கையிலுள்ள கத்தோலிக்க பீடத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் ஐயம் திரிபறக் கூறியிருக்கிறது.

சிங்கள கத்தோலிக்க பத்திரிகையொன்று தனது ஆசி

[4-ம்கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

ரிய தலையங்கத்தில் பின்வருமாறு எழுதுகிறது: 'நீர்கொழும்பு இடைத்தேர்தல் பிரசாரத்தில் எல்லோரும்மதத்துக்குப்பின்னால் ஒளிந்து கொண்டுபோராடுவதுவெட்கக்கேடான விஷயம். பொதுமக்களுக்கு செய்யவேண்டிய நியாயமான கடமைகளை சரிவரச்செய்து, அதே சமயம் எல்லா மக்களது உரிமைகளையும் நிலைநிறுத்த வேண்டியதே அதிகாரத்திலிருப்போரின் முக்கிய கடமையாகும். இப்பணியை விட்டுவிட்டுச் சமய சம்பந்தமான விவகாரங்களில் தலையிடுவது அநீதியானதாகும்'.

கத்தோலிக்க மதபீடம் அரசியல் வாதிகளுக்கு மறைமுகமாக கொடுத்திருக்கும் இந்த சம்மட்டி அடி அரசியல் பண்புள்ளவர்கள் எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டியது.

கேவலம், ஒரு தேர்தலுக்காக 'ஆ, கூ, என்று கத்துவதும் தேர்தல் முடிந்தபின் தங்கள் ஜோலியைப் பார்த்துக்கொண்டு கம்மென்று இருந்துவிடுவதும் அரசியல் வாதிகளின் வழக்கம்.

ஒற்றுமையான ஒரு தேசத்தைதுண்டுபிரிக்கும்இனம், மதம், மொழி போன்ற ஆயுதங்கள் அரசியல் வாதிக்கு நல்ல ஆயுதங்கள்.

பொதுமக்கள் இவற்றிடமிருந்து தப்பிக்கொள்வதற்கு எப்பொழுதும் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மீது தடைகள் விதிக்குமாறு பந்தோபஸ்து சபையில் ரஷ்யா கோரிக்கை

## அரபுப் பகுதிகளிலிருந்து வாபஸாகாவிடில் அடிக்கடி தகராறுகள் ஏற்படும்

## இஸ்ரேலுக்கே காஸா பிராந்தியமும் என்கிறார் அதன் பிரதமர் எஷ்கோல்

நியுயோர்க், ஜூலை 10

**புதிதாக சூயஸ் கால்வாய்ப் பகுதியில், தோன்றிய போர் நிலைமையையும், ஐ. அ. குடியரசு, இஸ்ரேல் ஆகியவற்றின் பரஸ்பர குற்றச்சாட்டுகளையும் விவாதிக்க நேற்றிரவு ஐ.நா.பந்தோபஸ்துசபை கூடியது.**

**கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வாபஸ் பெறுவிட்டால், அந்நாட்டுக்கெதிராகத் தடைகள் விதிக்க வேண்டுமென்று சோவியத் ரஷ்யா பந்தோபஸ்துசபையைக் கோரியது.**

சோவியத் பிரதிநிதி திரு. பெடரென்கோவ் பேசுகையில், அரபுப் பிராந்தியங்களை இஸ்ரேல் வைத்திருக்கும் வரை, மேற்கு ஆசியாவில் அடிக்கடி தகராறு நிகழும் சந்தர்ப்பம் இருக்கவே செய்யுமென்று கூறினார்.

ஐ.நா. சபைக்கு முன்னுள்ள அவசரமானபணி, இஸ்ரேல் துருப்புகளை அரபுப் பிராந்தியங்களிலிருந்து வாபஸ் பெறுவதேயாகுமென்றும் சோவியத் பிரதிநிதி குறிப்பிட்டார்.

மேற்குஆசியப் போருக்குப்பின் ஏற்பட்டுள்ள பலாபலன்களை அறவே நீக்கிவிட வேண்டுமென்றார் அவர்.

### ஆக்கிரமிப்பு கொள்கை

தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இஸ்ரேல் இறங்கி வருவது, அதுதனது வன்முறைக் கொள்கையை இன்னும் கைவிடவில்லை என்பதையே காட்டுகிறது என்று திரு. பெடரன்கோவ் மேலும் கூறினார்.

இஸ்ரேல் பொய்யுரைகளில் ஈடுபடுவதாகவும், அதன் நோக்கம், புதிய ஆக்கிரமிப்பில் இறங்குவதற்கு நேரம் சம்பாதித்துக் கொள்வதேயாகும் என்றும் சோவியத் பிரதிநிதி தெரிவித்தார்.

### பார்வையாளரை அனுப்பவேண்டும்

பிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில், சூயஸ் கால்வாய் பகுதிக்கு ஐ.நா.பார்வையாளர்களை அனுப்பிவைக்கும் அதிகாரம் ஐ.நா. பொதுக் காரியதரிசிக்கு அளிக்கப்பட வேண்டுமென்றார்.

இந்தஆலோசனைக்கு அமெரிக்கப்பிரதிநிதியும் ஆதரவு தெரிவித்தார்.

### கலந்தாலோசனை

சூயஸ் கால்வாய் பகுதிக்கு ஐ.நா. பார்வையாளர்களை அனுப்புவதையிட்டுச் சபை அங்கத்தவர்கள் முன்னதாகத் தமக்கிடையே கலந்தாலோசித்தனர். சபைத்தலைவரும் அங்கத்தவர்களுடன் இதுபற்றிக் கலந்து பேசினார்.

பார்வையாளர்களை அனுப்ப அனுமதி தரும்படி இஸ்ரேலிடமும், ஐ.அ. குடியரசிடமும் ஏற்கனவே யுதாண்ட் கேட்டிருந்தார். ஆனால் உத்தியோக பூர்வமான பதில் எதுவும் அவருக்கு இருநாடுகளும் இதுவரை அளிக்கவில்லை.

### கெய்ரோ கருத்து

பார்வையாளர்களை சூயஸ் கால்வாய்ப் பகுதிக்கு அனுப்புவதை ஐ.அ. குடியரசு கொள்கையளவில் ஏற்றுள்ளதாக கெய்ரோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், பார்வையாளர்களை அப்பகுதியில் நிறுத்துவது, இஸ்ரேல் பிடித்துள்ள பகுதிகளை அங்கீகரிப்பதாகவோ அல்லது தற்போதைய எல்லை நிலைகளை ஏற்றுக்கொள்வதாகவோ அமையக்கூடாது என்று ஐ. அ. கு. கூறுகிறது. அத்துடன், கால்வாய்ப்பகுதியில் நிறுத்தப்படும் பார்வையாளர்கள், இஸ்ரேல் துருப்புகள் அங்கிருந்து வாபஸாகும்வரை, ஒருகுறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே அங்கு இருக்க வேண்டுமென்றும் ஐ. அ. கு. விரும்புகிறது.

### இஸ்ரேலின் நிலை

டெல் அவிவ் வட்டாரங்கள், ஐ.நா. பார்வையாளர்கள் இஸ்ரேல்—சிரியா எல்லைப்பகுதிக்கு அனுப்பப்படுவதை வரவேற்கின்றன.

இதற்கிடையில், டெல்அவிவில் அளித்த பேட்டியொன்றில் காஸாப்பிராந்தியத்தையும், பழைய ஜெருசலத்தையும் இஸ்ரேல் தன்னிடமே வைத்துக் கொள்ளுமென்று இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் அறிவித்துள்ளார்.

## கத்திக்கும் அஞ்சாது கத்தினார்!

பம்பாய், ஜூலை 10

இரண்டு பெண்களைத் தங்களுடன் ஒரு டாக்ஸியில் ஏற்றிச்சென்று வழியில் விட்டுவிட்டு, அதே டாக்ஸியில் தொடர்ந்து பிரயாணம் செய்த இருவரை, அவர்களது பயமுறுத்தலுக்கும் அஞ்சாது, பொலிசாரிடம் பிடித்துக்கொடுத்த ஒரு டாக்ஸி டிரைவருக்குப் பம்பாய் பொலிஸ் கமிஷனர் ரூ. 100 வெகுமதி யளித்தார்.

42வயதான அந்த டாக்ஸி டிரைவரின் பெயர் அமர்சிங் லாய் மண்ட் தாகூர். அவரது டாக்ஸி, பொலிஸ் ஸ்டேஷன் அருகில் வந்ததும் உதவி கோரிக்கத்தினாராம். டாக்ஸியில் வந்த இருவரும் கத்தியைக் காட்டிப் பயமுறுத்திய போதும் அவர் அஞ்சவில்லை.

இருவரையும் பொலிசார் பிடித்துக் கொண்டனர். அவர்களிடமிருந்து ரூ. 2000 மதிப்புள்ள தங்க ஆபரணங்களும், ரொக்கமும் கைப்பற்றப்பட்டன.

## வைஜயந்திமாலா நடனப் பள்ளி

பம்பாய், ஜூலை 10

சிறந்த நாட்டிய கலைஞரும், சினிமா நடிகையுமான வைஜயந்திமாலா பம்பாயில் பரத நாட்டிய, இசைப்பள்ளி ஒன்றை செப்டம்பர் மாதத்தில் தொடங்கவிருக்கிறார். அது 'நாட்டியாலயம்' என்று அழைக்கப்படும்.

## தி. மு. க. எழுச்சி நாள் சுதந்திரா ஆதரவு

சென்னை, ஜூலை 10

தி. மு. கழகத்துடன் சேர்ந்து தாங்களும் எழுச்சி நாள் கொண்டாடப்போவதாகத் தமிழ்நாடு சுதந்திராக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

சேலம் இரும்புத் தொழிற்சாலை, தூத்துக்குடி துறைமுகத்திட்டம் ஆகியவைகளை நிறைவேற்றக் கோரித் தமிழ்நாடு முழுவதும் எதிர்வரும் 23-ந் திகதியன்று 'எழுச்சிநாள்' கொண்டாட தி. மு. கழகம் முடிவு செய்தது தெரிந்ததே.

தி. மு. கழகத்தின் இந்தத் திட்டத்துக்குத் தமிழ்நாடு சுதந்திராக் கட்சியும் ஆதரவு தெரிவித்து இருக்கிறது.

# கெயிரோவில் கூடும் 5 அரபு நாடுகள்

கெயிரோவில், ஐந்து அரபு நாடுகளின் உச்சி மாநாடு நாளை நடைபெறவிருக்கிறது.

நாஸரைச் சந்தித்துப் பேச, அல்ஜீரியப் பிரதமர் திரு. பூர்மதீன் கெயிரோ வந்துசேர்ந்துள்ளார்.

ஜோர்தான் மன்னர் ஹுஸெயினும் இன்றோ நாளையோ கெயிரோ வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜோர்தான், ஐ. அ. கு., சிரியா, அல்ஜீரியா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளே இம்மாநாட்டில் பங்கு பற்றும்

## பீஹாரில் 'கேரோ' கிடையாது

அமிர்தசரஸ், ஜூலை 10

பஞ்சாப் ராஜ்யத்துக்கு வந்துள்ள பீஹார் முதல் மந்திரி இங்கு பேசுகையில், ராஜ்யத்தில் கேரோ முற்றுகைக் கிளர்ச்சி முறையில்லையெனக் கூறினார்.

எந்த அரசியல் கட்சியோ அல்லது தனி நபரோ பீஹாரில் 'கேரோ' போன்ற வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபடத் துணிந்தால், பீஹார் அரசாங்கம் அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் என்றார் அவர்.

# ஐ. அ. கு. தலைவர்களை தினேஷ்சிங் சந்தித்தார்

ஐ. அ. குடியரசுக்கு விஜயம் செய்துள்ள இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ் சிங், ஜனாதிபதி நாஸர், மற்றும் ஐ. அ. கு. உதவிப் பிரதமர், வெளியுறவு மந்திரி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார்.

கெயிரோவை விட்டுப் புறப்பட முன்னர், நாஸருடனான தமது பேச்சுவார்த்தைகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன என்று திரு. தினேஷ் சிங் கூறினார். மேற்கு ஆசிய விவகாரத்தில், ஐ. அ. குடியரசுக்கு இந்தியா எவ்வகையில் சிறந்த உதவி அளிக்க முடியுமென்பதையிட்டுத் தாங்கள் ஆலோசித்ததாக அவர் தெரிவித்தார்.

நாஸரிடமிருந்து நன்றிச் செய்தியொன்றைப்பிரதமர் திருமதி இந்திராகாந்திக்குத் தாம் கொண்டுசெல்வதாகவும் அவர் கூறினார்.

திரு. தினேஷ் சிங்கின் விஜயத்தின் பலனாக, இந்தியாவிடமிருந்து ஐ. அ. குடியரசு ரூ 12 கோடி பெறுமதியான பொருட்களை வாங்கவிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட, இந்திய வர்த்தக தூது கோஷ்டி ஒன்று விரைவில் கெயிரோ வந்துசேருமென்று தெரிகிறது.

# நைஜீரியா நிலைமை தெளிவாக இல்லை

## உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடைபெறுகிறது

லாகோஸ், ஜூலை 10

நைஜீரியாவில் தொடர்ந்து உள்நாட்டுப் போர் கடுமையாக நடைபெறுகிறது.

போரில் ஈடுபட்டுள்ள நைஜீரிய சமஷ்டித் துருப்புகளும், கிழக்கு நைஜீரியத் துருப்புகளும் ஒன்றுக்கொன்று முரணான செய்திகளைத் தெரிவிக்கின்றன. இதனால், அந்நாட்டில் உள்ள உண்மையான நிலை தெளிவாகத் தெரியவில்லை.

பிரிந்து சென்ற கிழக்கு நைஜீரியாவின் தலைநகரான எனுாக்குக்குச்சற்றுத்தொலைவில உள்ள பல்கலைக் கழகம் ஒன்றைச் சமஷ்டித் துருப்புகள் சுற்றி வளைத்துள்ளதாக லாகோஸிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

### கி. நைஜீரியா மறுப்பு

ஆனால், கிழக்கு நைஜீரியாவோ இச் செய்தியை மறுத்துள்ளது. சமஷ்டித் துருப்புகள் கிழக்கு நைஜீரியாவுக்குள் ஆழமாகப் பிரவேசித்துள்ளது என்பதையும் கிழக்கு நைஜீரியா மறுத்துள்ளது.

கிழக்கு நைஜீரியத் துருப்புகள் தாம் நிலைகொண்டுள்ள இடங்களைச் சமஷ்டித் துருப்புகளின் தாக்குதலுக்கெதிராக தாக்குப் பிடித்து வருவதாகவும் கிழக்கு நைஜீரியா வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

# ஹொங்கொங்-சீன எல்லையில் மீண்டும் கலவரம்

## ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்

## நால்வர் மரணம்: ஒருவர் பொலீஸ்காரர்

ஹொங்கொங், ஜூலை 10

ஹொங்கொங்குக்கும் சீனாவுக்குமிடையேயான எல்லைப்பகுதியில் மீண்டும் கலகம் ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் சீன இயந்திரத் துப்பாக்கிகளின் குண்டுகளுக்கு 4 பொலிசார் இரையான அதே எல்லைப்பகுதி கிராமத்தில் நேற்று மீண்டும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

எல்லையின் சீனப் பகுதியிலிருந்து எறியப்பட்ட கைக்குண்டொன்றினால் ஒரு கிராமவாசி காயப்படுத்தப்பட்டார்.

### ஹொங்கொங்கில் நால்வர் மரணம்

ஹொங்கொங்கில் நேற்றுத் தொடர்ந்து வன்முறைச் செயல்களில் சீனர் ஈடுபட்டனர். இவ்வன்முறைச் சம்பவங்களில் நால்வர் இறந்தனர். இவர்களில் ஒருவர் பொலிஸ்காரர் ஆவார்.

சீனர்கள் தெருக்களில் வெறியாட்டம் ஆடினர். கார்களுக்குத் தீ வைத்தனர். கடைகளை அடித்துச் சேதப்படுத்தினர். அப்போது பொலிசார் சுட்டதில் மூவர் இறந்தனர்.

## எம். பி.க்கு மகஜர்

பூநகரி, திங்கள்

பூநகரி, பல்லவராயன் கட்டு மக்கள், பல்லவராயன் கட்டில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இவ்வளவு காலமும் ஆங்கிலம் பயிற்றுதற்கு ஆசிரியர் இல்லையென்றும், ஆங்கில ஆசிரியர் இல்லாமையால் பிள்ளைகள் ஆங்கில அறிவில் மிகக் கீழ்நிலையில் இருக்கின்றார்கள் என்றும், இதனை நிவர்த்தி செய்து பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திற்கும் வட மாகாண கல்வி வித்தியாதிபதிக்கு பெற்றோர்கள் 62 பேர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க மாகாணசங்கம்

## அடுத்த ஆண்டு இலங்கையில் உதயமாகும்

பண்டத்தரிப்பு, திங்கள்

அடுத்த ஆண்டு ஆனி 2ம் திகதி இலங்கையில் கத்தோலிக்கரின் மாகாண சங்கம் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆயத்தங்களை யாழ்ப்பாணம், கண்டி, காலி திருக்கோணமலை கொழும்பு, சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மேற்றிராணிமார்கள் கவனித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மேற்றிராணியார் டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை இதற்கான ஒழுங்குகளை கவனித்துவருகிறார். மேற்றிராணிமார்கள், துறவிகள், இல்லறத்தோர் ஆகியோரைப் பிரதிநிதிகளாகக் கொண்டுவிளங்கும் இச்சங்கம் ஆலோசனைச்சபை, சட்டசபை என்ற இரு பிரிவுகளையும் கொண்டிருக்கும்.

கத்தோலிக்க மக்களால் கொண்டுவரப்படும் ஆலோசனைகள், பிரேரணைகள் பற்றி இச்சங்கத்தில் கலந்தாலோசிக்கப்படும். ஒவ்வொரு மேற்றிராசனத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களும் தமது ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் இங்கு தெரிவிக்கலாம்.

## 12 பேரும் விடுதலை

### சூதாடியதான வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 'கிளப்' ஒன்றில் சட்டவிரோதமாகச் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 12 பேர் மீது பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 12 பேரையும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் நேற்று விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் முன்பு இங்கு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. சுடமல்கொட, சப் இன்ஸ்பெக்டர் ஞெட்றிகோ ஆகியோர் சாட்சியமளித்தனர். [ந. நி,]

## ஒய்வு பெற்றார்

சுழிபுரம், திங்.

மாதகல் நுணசை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வ. சதாசிவம் இம்மாதம் முதல் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஒரு பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது. ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. சதாசிவம் சமூக சேவையாளருமாவார். இவர் நுணசை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நுணசை ஐக்கிய சங்கம், மாதகல் மேற்கு சன சமூக நிலையம் ஆகிய ஸ்தாபனங்களின் தலைவராகப் பணி புரிந்து வருகின்றார்.

## இடதுசாரி எம். பி. க்கள்

### யாழ்ப்பாணம் வருவர்

குரும்பசிட்டி, திங்கள்

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் யாழ்ப்பாணப் பிரதேசக் கிளைகள் வடபகுதியில் மூன்று பகிரங்கக் கூட்டங்களை நடாத்த ஒழுங்குகள் செய்து வருதாக அறியப்படுகிறது. இப்பகிரங்கக் கூட்டங்கள் திரு. தர்மகுலசிங்கம் நினைவு தினம் ஆகஸ்ட் ஹர்த்தால் ஞாபகார்த்தநாள், பொன். கந்தையா நினைவு விழா என்ற அடிப்படையில் நிகழவிருக்கின்றனவென்றும் இவற்றில் கலந்து கொள்ளும் பொருட்டு பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தனா, அகலவத்தை எம். பி. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, கொலன்னாவ எம். பி. ரி. பி. இலங்கரத்தினா, அக்குரஸ எம். பி. டாக்டர் எஸ் ஏ. விக்கிரமசிங்கா என்போர் யாழ்ப்பாணத்துக்கு வருவர் என்றும் பருத்தித்துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இம்மூன்று பகிரங்கக் கூட்டங்களும் நடாத்தப்படலாமென்றும் அறியப்படுகிறது.

## "மக்கள் வங்கி கிளை நிறுவுக"

### அச்சுவேலி கி. ச. தீர்மானம்

அச்சுவேலி, திங்கள்

அச்சுவேலியின் துரித வளர்ச்சிக்கு மக்கள் வங்கிக் கிளை ஒன்றை அச்சுவேலியில் திறக்கவும், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையை நவீன வசதிகளுடன் திருத்தி அமைக்கவும் வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்குமாறு கோரும் தீர்மானம் ஒன்று அச்சுவேலிக் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் தொகுதி எம். பி. திரு. கதிரவேற்பிள்ளைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி காலை நீராவியடி நாவலர் மண்டபத்தில் நடைபெறும். [அ. நி.]

## "மது உற்பத்திக்கு மரம் கொடாதீர்"

சாவகச்சேரி, திங்கள்

"பஞ்சமா பாதகங்களுக்கெல்லாம் காரணமான மதுவினால் நாடு பிற்போக்கான நிலையில் உள்ளது. எனவே மது உற்பத்திக்கு மரங்களைக் கொடுக்கலாகாது" எனப் பொது மக்களைக்கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று சாவகச்சேரி வடக்கு ஞானோதய வாசிகசாலை மண்டபத்தில் திரு. பி. சுப்பையா தலைமையில் நடைபெற்ற நலன் விருத்திச் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை உபதலைவர் திரு. எம். விநாசித்தம்பி பேசுகையில் நாட்டுமக்கள் அனைவரும் இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஒத்துழைத்தால் நம் நாட்டில் எவ்விதத்தீய செயல்களும் ஏற்பட இடமிருக்காது என்றார். மற்றும் பலர் பேசினர்.

## பெற்றோர்ஆசிரியர் சங்கம் தீர்மானம்

சாவகச்சேரி, திங்கள்

நுணுவில் மேற்கு கணேச வித்தியாசாலைபெற்றோர்ஆசிரியர் சங்கக் கூட்டம் வித்தியாசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. கா. கந்தையா தலைமையில நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரியப்பட்டனர் தலைவர் திரு. கா. கந்தையா, உபதலைவர்திரு தம்பாப்பிள்ளை, காரியதரிசி: திரு. எஸ். கே. சின்னத்தம்பி, தனாதிகாரி திருமதி எஸ் சுவாமிநாதர் 9 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இப்பாடசாலைக்கு அருகே உள்ள பாடசாலையில் மாணவர்கள் குறைவாக இருப்பதால் இருபாடசாலைகளையும் ஒன்றாக இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது

## பெற்றார்தினவிழா

சாவகச்சேரி, திங்கள்

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை பெற்றார்தின விழா வித்தியாசாலை மண்டபத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. வடமாநிலக் கல்வி ஆலோசகர் திரு. இ. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக்கலந்து சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். திரு. எம். குணரத்தினம் தீபமேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். மாணவ மாணவிகளின் நாட்டிய நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன திருமதி இ. திருநாவுக்கரசு மாணவ மாணவிகளுக்குப் பரிசில்களை வழங்கினார்.

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் கட்டளைக் குரவர் வண. மேரியோசவ் ஆதரவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. ஆசிரியர் சார்பில் திரு. ச. பீற்றர்பிள்ளை, திரு. க. ஞானப்பிரகாசம் ஆகியோரும் பெற்றோர் சார்பில் திரு. சூ. அமிர்தநாதரும் பேசினர்.

பின்வரும் நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: பாதுகாவலர்- வண. சுவாமி மேரியோசவ், போஷகர்- திரு. ஜி ஜி. பொன்னம்பலம் எம். பி., தலைவர்- திரு. நீக்கிலாப்பிள்ளை, உபதலைவர்- திரு. நீ. எஸ்தாக்கி, காரியதரிசி- திரு. சூ. அமிர்தநாதர், [illegible] திரு. சு. [illegible] பேர் கொண்ட நிர்வாக சபையும்தெரிவுசெய்யப் பட்டது.

## சிங்களம் கற்க கோரிக்கை

வெள்ளவத்தை, திங்கள்

பிரதம தபாற் தந்திப் பகுதித் திணைக்களம், கடல் கடந்த தந்திச் சேவைப் பகுதி ஆகியவற்றிலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர்களில் சிங்களத் தராதரங்களில் சித்தியடைய வேண்டியவர்களைத் தற்போது பிரதம தபாற்கந்தோர் மதிய உணவு அறையிலும், கொள்ளுப்பிட்டி சேமிப்பு வங்கிக் கட்டிடத்திலும் நடைபெற்றுவரும் சிங்கள வகுப்புகளில் ஒழுங்காகக் கலந்து கொள்ளுமாறு வேண்டும் சுற்றறிக்கையொன்றைப் பிரதம தபாற் தந்திப் போக்குவரத்து அதிபர் திரு. ஏ. எல். பெரேரா சகல கிளைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## பொகவந்தலாவையில் பாரதிதாசன் விழா

பொகவந்தலாவ, திங்கள்

"தம்மிடையே ஏற்றத் தாழ்வுகளையும் வேற்றுமைகளையும் கொண்டு வாழும் ஓர் இனம்," இன உரிமை என்று சொல்லிப் போராடுவது தவறானது. முதலில்தன் இனத்துள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்தெறிந்தாலன்றி ஒற்றுமைப் பட்டு உரிமைக்குரல் எழுப்ப முடியாது" என பொகவந்தலாவ சென். மேரிஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பாரதிதாசன் நினைவு விழாவில் பிரதம பேச்சாடராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. ஞா. பெ. அல்பிறட் கூறினார்.

தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ் திருச்செந்தூரன் பேசுகையில் "மலையகம் முன்னேற வேண்டுமானால் படித்த வாலிபர்கள் பழைய நிலையை மறந்து புதிய உலகம் அமைக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார் மற்றும் பலரும் பேசினர்.

## எம். பி. உறுதி

யாழ்ப்பாணம், செவ்.

"தரமான, உறுதியான கட்டிடங்களை நமது நாட்டில் அமைப்பதற்கு கட்டிடப் பயிற்சி பெற்றதொழில் நுட்ப வல்லுநர்களாலே தான் முடியும். நல்ல கட்டிடங்களை உருவாக்குவதற்கும், வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்குமே அரசாங்கம் கட்டிடப் பயிற்சி நிலையங்களை நிறுவியுள்ளது. யாழ்ப்பாணம் தொகுதியில் உள்ள இந்த கட்டிடப் பயிற்சி நிலயத்துக்கு வேண்டிய இயன்ற உதவிகளைச் செய்வேன்" என யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கட்டிடப் பயிற்சி நிலயத்தைச் சென்று பார்வையிட்ட யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

திரு. கா. ரகுநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு கே. துரைராசா நன்றி கூறினார்.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, திங்கள்

பெரியவிளான் கிராம சேவையாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி சங்கானைக்கிராம சேவையாளர் பகுதிக்கு அடுத்தமாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பெரியவிளான் கிராம சேவையாளராக திரு. வேதநாயகம்கடமையாற்றுவார்.

## இந்திய ஆறுகள் பொங்குகின்றன

புதுடில்லி, ஜூலை 10

பிரமபுத்திரா ஆறு அபாய மட்டத்தைத் தாண்டியுள்ளதைத் தொடர்ந்து, கங்கா — ஜமுனா பள்ளத்தாக்கிலும் நீர் மட்டம்உயரத் தொடங்கியுள்ளது.

## மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் ஆசிரியர் கலாசாலை இந்துமா மன்றத்தின் சார்பில் இன்று மாணிக்கவாசகர் குருபூசை விழா நடைபெறவிருக்கின்றது. பண்டிதை திருமதி எஸ். அமிர்தாம்பிகை 'மணிவாசகரும் திருவாசகமும்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

## காரில்ரூ. 14லட்சம் தங்கம்

சென்னை, ஜூலை 10

ஒரு காரை அதிகாரிகள் துரத்திச் சென்று நிறுத்தி அதிலிருந்து 7000 தோலா தங்கத்தைக் கைப்பற்றினார்கள். தங்கத்தின் மதிப்பு ரூ. 14 லட்சம் ஆகும். காரில் 4 பேர் இருந்தார்களெனத் தெரிகிறது. இவர்கள் நால்வரும் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் சென்னையில் நடந்தது

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ். 11-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 நிலைய ஒலிப்பதிவுகள், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 வீணை—கமலா கிருஷ்ணமூர்த்தி, 7-45 யுனெஸ்கோ உரைச்சித்திரம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-15 திருக்கோவையார் திருவாசகம்.


ஸ்தாபிதம்: 1929 **S. R. S.** போன்: 296

ஜவுளி மாளிகையில்

விலை கூடிய பலவிதமான

**சில்க் சேலைகள்**

குஞ்சம் (டசல்ஸ்) இணைத்தது

மலிவு விலை ரூபா 30/- மாத்திரம்

உங்கள் தேவைகளை முன்கூட்டியே தெரிவு செய்யுங்கள்!

மற்றும்

C. W. E. ஜவுளிகள்


கைத்தறிப் புடவைகளும்

எங்களிடம் நிதான விலைகளில் பெறலாம்

எஸ். ஆர். செல்லத்துரை

[அங்கீகாரம் பெற்ற C. W. E. மொத்த, சில்லறை, விற்பனையாளர்]

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பன் இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்.

கோப்பாய் அரசினர் மகா வித்தியாலயத்தின் இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் .கம்பன் இல்லம் முதலிடத்தை பெற்றது. பாரதி இல்லம், வள்ளுவர் இல்லம் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றன.

கோப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு. ஏ. சிவகுரு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இப்போட்டியில் மேற்பிரிவில் செல்வன் எஸ். விநாயகமூர்த்தியும், செல்வி எஸ். சரஸ்வதியும், மத்திய பிரிவில் செல்வன் ஆர். தேவபாலனும், செல்வி ஆர். புஷ்பராணியும், கனிஷ்ட பிரிவில் செல்வன் கே. தேவராசாவும், செல்வி எம். கலைவாணியும், சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். வித்தியாலய அதிபர் திரு. கே. சோமசுந்தரம் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார். திருமதி பி. குகதாசன் பரிசில்களை வழங்கினார். —— (அ. நி.)

## மல்யுத்தப்போட்டி

நாரந்தனை, திங்கள்

மண்ணூரில் நடைபெறவிருக்கும் மல்யுத்தப் போட்டிக்கு உள்ளூர் மல்யுத்த வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. மன்னூர் மாவட்ட விளையாட்டுப் பொறுப்பதிகாரி இப்போட்டி சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்.

## லைடன் விளையாட்டு அபிவிருத்தி சங்கம்

நாரந்தனை, திங்கள்

தீவுப் பகுதிக் காரியாதிகாரி பிரிவில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக விளையாட்டுப்போட்டிகளையும் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்துவதற்காக 'லைடன் விளையாட்டு அபிவிருத்தி சங்கம்' என்னும் பெயரில் புதிய சங்கம் ஒன்று ஊர்காவற்றுறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கிறது.

## சாவகச்சேரியில் விளையாட்டுவிழா

சாவகச்சேரி, திங்கள்

தென்மராட்சிக் காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்த எழுபது விளையாட்டுக் கழகங்கள் கூட்டாகச்சேர்ந்து நடத்தும் விளையாட்டுவிழா ஆகஸ்ட் மாதத்தில் சாவகச்சேரியில் நடைபெறுமென்றும் காரியாதிகாரி திரு. ஆர் சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு 60 சனசமூக நிலையங்களையும் 10 விளையாட்டு கழகங்களையும் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றவிருப்பதாகவும் அறியப்படுகிறது. விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆர். சிறீதரன் எம். சீவரத்தினம் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை கவனித்து வருகின்றனர். இவ்விழாவிற்குப்பிரதம விருந்தினராக தேசிய மய சேவைகள், விளையாட்டுத் துறைஅமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா கலந்து கொள்வாரென நம்பப்படுகிறது.

உடுப்பிட்டி

## அமெரிக்கமிஷன் கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

இமையாணன், திங்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் இவ்வருட விளையாட்டுப் போட்டியில் நியூற்றன் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. இரண்டாவதாக பிறவுண் இல்லமும், மூன்றுவதாக பிக்னல் இல்லமும் வந்தன. இல்ல அலங்கரிப்பில் முறையே முதலாவதாக பிறவுண் இல்லமும், இரண்டாவதாக நியூற்றன் இல்லமும், மூன்றுவதாக செல்லையா இல்லமும் வந்தன.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. விஸ்வநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திருமதி விஸ்வநாதன் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்

வெற்றி வீரர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

அதிமேற்பிரிவு: வி. விநாயகமூர்த்தி, எஸ். கனகசபை. மேற்பிரிவு: எம். பாலசுப்பிரமணியம், ரி. அருணகிரிராசா. மத்திய பிரிவு: எம். சிதம்பரநாதன். கீழ்ப் பிரிவு: கே. பாலச்சந்திரன். அதிகீழ்ப் பிரிவு: நடராசா. பாலர் பிரிவு: எஸ். திலகேஸ்வரன்.

அஞ்சலோட்ட வெற்றிக் கேடயத்தை செல்லையா இல்லம் பெற்றது.

மற்றும் சில விளையாட்டுக்களின் முடிவுகள் பின்வருமாறு:

அதிமேற்பிரிவு: 100 யார் ஓட்டம்- வி. நவகோடிநாராயணசாமி, எஸ். கனகசபை, வி. யோகராசா. அரை மைல் ஓட்டம்- வி. விநாயகமூர்த்தி, எஸ். நாராயணசாமி, வி. நவகோடிநாராயணசாமி. நீளம் பாய்தல்- எஸ். கனகசபை, வி. விநாயகமூர்த்தி, வி. அமிர்தலிங்கம். உயரம் பாய்தல்- எஸ். கனகசபை, வி. அமிர்தலிங்கம், என். சண்முகரத்தினம். குண்டெறிதல்- வி. விநாயகமூர்த்தி, வி. அமிர்தலிங்கம், வி. குமாரசிறீதரன். மேற்பிரிவு: 100 யார் ஓட்டம்- எம். சிறீசண்முகநாதன், எஸ். கோபால், கே. வரதராசா. ஒரு மைல் ஓட்டம்- தனபாலசிங்கம், கே. திருச்செந்தூர், நிமல்ராஜ். நீளம் பாய்தல்- ரி. அருணகிரிராசா, எம். திருச்செல்வம், எஸ். ஆறுமுகம். உயரப்பாய்தல்-எஸ். அருந்தவராசா, வி. வேலாயுதம், கே. மகேந்திரன். ஈட்டி எறிதல்- எம். பாலசுப்பிரமணியம், எஸ். மகாலிங்கம், கே. அருந்தவம். குண்டு எறிதல்- எம். பாலசுப்பிரமணியம், எஸ். மகாலிங்கம், எம். குட்டித்தம்பி. தடை ஓட்டம்- ரி. அருணகிரிராசா, வேலாயுதம், வி. பத்மநாதன். மத்திய பிரிவு- 100 யார் ஓட்டம்- கே. கோபாலசுந்தரம், வி. வன்னிமரம், ஆர். சிவசுந்தரரத்தினம். 220 யார் ஓட்டம்- கே. கோபாலசுந்தரம், வி. வன்னிமரம், எஸ். ராமநாதன். நீளம் பாய்தல்- வி. வன்னிமரம், ஜி. குகதாசன், கே. கோபாலசுந்தரம். உயரம் பாய்தல்- ஆர். சிவசுந்தரரத்தினம், எஸ். சோதீஸ்வரன், ஜி. குகதாசன். ஈட்டி எறிதல்- எம். சிதம்பரநாதன், எஸ். ஜெயகோபாலராசா, ரி. பரமேஸ்வரன். தடைஓட்டம்- ஜி. குகதாசன். எஸ். சோதீஸ்வரன், ஆர். சூரியகுமார். கீழ்ப் பிரிவு: 100 யார் ஓட்டம்- கே. புவனேந்திரன், ரி. குலரத்தினம், கே. பாலச்சந்திரன். உயரம் பாய்தல்- கணேஸ்கரன், எஸ். பாலசுப்பிரமணிம், வி. கணேசன். அதிகீழ்ப்பிரிவு: 75 யார் ஓட்டம்- நடராசா, ரி. விஜயகுமார், ஜெகசோதிலிங்கம். நீளப் பாய்தல்-நடராசா, ரி. விஜயகுமார், ஆர். இன்பராசா. பாலர் பிரிவு: 75 யார் ஓட்டம்- திலகேஸ்வரன், எம். பொன்னுத்துரை, ஆர். சூரியகுமார் 50 யார் ஓட்டப்- எஸ். திலகேஸ்வரன், ஆ. சிறீரங்கநாதன், எஸ். குகதாஸ்.

## விளையாட்டுப்போட்டி நடாத்த முடிவு

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு விளையாட்டு அதிகாரி திரு. கா. அரிச்சந்திரா தமது பிரிவுக்குட்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கிடையே ஒரு விளையாட்டுப்போட்டியை நடாத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்துவருகின்றார்.

விழாக்குழுத்தலைவர் திரு. செ. கந்தையா தலைமையில் நடைபெற்ற ஓர் ஆலோசனைக்கூட்டத்தில் விளையாட்டு விழாசம்பந்தமான பல விஷயங்கள் ஆராயப்பட்டன.

## வரிவிளம்பரம

### தேவை

மனேஜர்

நல்ல நிலையிலுள்ள ஓர் அச்சுயந்திரசாலையை நிர்வாகப் பொறுப்பேற்று நடாத்த பிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜர் தேவை. 14-7-67 அன்று காலை 9 தொடக்கம் மாலை 5 மணிவரை K.K.S. ரோட்டிலுள்ள 586-ம் இலக்க விலாசத்தில் நேரில் சந்திக்கவும். 2411

### விற்பனைக்கு

உழவுயந்திரம்:

நல்ல நிலைமையில் 22 ஸ்ரீ 8000 தொடர்பிலக்கமுள்ள [Massey Ferguson-35] உழவு யந்திரம் விற்பனைக்குண்டு. M. M. T. P. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2410

### காணவில்லை

அல்சேஷன் நாய்

தாவடியில் திரு. க. பஞ்சலிங்கத்துக்குச் சொந்தமான கறுப்பும், வெள்ளையும் கலந்த அல்சேஷன் ஆண்நாயை 9-7-67 தொடக்கம் காணவில்லை. தகவல் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். லிங்க மஹால், தாவடி, கொக்குவில். 2408

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., வைணசபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்.

## விசேஷ அபிஷேகம

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவிலில் இன்று பகல் விசேஷ அபிஷேகமும், மேளக்கச்சேரியும் நடைபெறும். இரவு திருவிழாவின் போது நாடகமும் நடைபெறும். [அ. நி.]

உ

## திருமண அழைப்பு

### சிவப்பிரகாசம் — சந்தானலக்ஷ்மி

நிகழும் பிலவங்க ஸூ ஆனி மீ 29-ம் நாள் [13-7-67] வியாழக்கிழமை இரவு 8-15 மணி முதல் 10-00 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் களுத்துறைத் தொழில் உத்தியோகத்தர் செல்வன் க. சிவப்பிரகாசம் அவர்களுக்கும் ஸ்ரீவேல்ஸ்ரோஸ் உரிமையாளர் வே. நா. கணபதிப்பிள்ளை அவர்களின் புத்திரி செல்வி சந்தானலக்ஷ்மி அவர்களுக்கும் வியாபாரிமூலை சித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழ்வுறும் திருமணத்தின் போது உறவினர் அன்பர்கள் குடும்ப சகிதம் சமுகம்தந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை,
13-7-67. 104

திருமதி. கந்தையா,
வே. நா. கணபதிப்பிள்ளை,
[மணமக்களின் பெற்றோர்]


கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டக்களப்பு]

ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]

விஜிதா [ஹட்டன்]

மொடேர்ண் [பண்டாரவளை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனேகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்

நீ

இசை விஸ்வநாதன்
[பாஸ்கள்ரத்து]

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
தங்கத் தம்பி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். வி. ரங்கராவ்
நடித்த
மந்திரவாதி

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
மாடப்புறு

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Debbie Reynolds &
Ricardo Montalban
in
THE SINGING NUN

கும்பாபிஷேக தேவைகளுக்கு
தேவையான
அஷ்டபந்தன மருந்து
* கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
* திருமண விழாக்கள்
* புதுமனைப் பிரவேசம்
* புதுமனைக்கு அத்திவாரமிடல்
ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளவுகூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.
* மயில் மார்க் சந்தன வில்லைகள்
* சுகந்த சந்தனப் பவுடர்
நறுமணம் கமழும்
* சந்தனக் குழம்பு
[உடன் யந்திரத்தினுல் அரைத்தது]
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்
எஸ். சுப்பிரமணியம்
அன் கொமபனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை நிறுத்தத்திலிறங்கிய

# தபால் ஊழியர் புதிதாக விண்ணப்பிக்கவேண்டும்

## மந்திரிசபை முடிவு

### தொழிற் சங்கங்கள் ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

தபால் சேவை கட்டாய சேவையெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவந்த காரணத்தினால் சேவையிலிருந்து விலக்கப்பட்ட தபால் தரம் பிரிக்கும் ஊழியர்கள் மீண்டும் வேலையில் சேர்வதானால் புதிதாக இப்பதவிகளுக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டும் என நேற்றிரவு கூடிய மந்திரிசபை முடிவுசெய்தது.

இதேநேரத்தில், வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்த ஊழியர்கள் மந்திரிசபை வழங்கும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

மந்திரிசபையின் இந்த முடிவுபற்றி மேற்படி ஊழியர் சங்கம் விரிவாக ஆலோசனை செய்து வருகிறது. விரைவில் இவர்கள் பிரதமருக்குத் தமது முடிவைத் தெரிவிக்க விருப்பதாகவும் அதன் பின்னர் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரிகின்றது.

மந்திரிசபையின் இந்த முடிவை வர்த்தக ஊழியர் சங்கம், வங்கி ஊழியர் சங்கம், தோட்டத் தொழிலாளர் சங்கம், ஜனநாயக தேசிய காங்கிரஸ் ஆகியன எதிர்த்து ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

## டாக்டர்கள் 'தாமதவேலை' கைவிடப்பட்டது

கொழும்பு, திங்கள்

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக 'தாமதவேலை' யில் ஈடுபட்டு வந்த அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர்கள் இன்று முதல் தாமதவேலையைக் கைவிட்டு வழமைபோல் வேலை செய்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட டாக்டர் செல்வி மலலஹம பற்றிய விசாரணையில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே டாக்டர்களின் தாமதவேலை கைவிடப்பட்டுள்ளது. டாக்டர் செல்வி மலலஹம மீண்டும் வேலையிலமர்த்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனைவியின் தங்கச்சங்கிலி திருட்டு கணவன் கைது!

யாழ்ப்பாணம், திங்கள்

களவுபோனதாக புகார் செய்யப்பட்ட தங்கச்சங்கிலியொன்றை பொலிஸார் களவு போனதாக புகார் செய்யப்பட்ட வீட்டிலிருந்தே கண்டுபிடித்தனர். இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை கரையூரில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரையூரைச்சேர்ந்த ஜேக்கப் ரோசா என்ற பெண்ணின் தங்கச் சங்கிலியொன்று காணமல் போனதாக கரையூர் பொலிஸில் ரோசா செய்த புகாரின் பேரில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா நடத்திய புலன் விசாரணையைத் தொடர்ந்து களவு போனதாக சொல்லப்பட்ட சங்கிலி அந்த வீட்டிலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாகரோசாவின் கணவரான ஜேக்கப் என்பவரும் ரோசாவின் சகோதரியான ராஜாத்தி என்பவரும் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டனர். [ந.நி]

## உற்சவம்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி மேற்கு மத்தொனி முங்கோடை முருகன் ஆலய வருடாந்த உற்சவவிழா சென்ற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. வருகிற வியாழக்கிழமை ஆனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## பத்மநாதனுக்கு பட்டம்

கொழும்பு, ஞாயிறு

வர்த்தக இலாகா உதவி டைரக்டர் திரு. திருவிளங்கம் பத்மநாதனுக்கு 'புல் பிரைத்' கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தவார முற்பகுதியில் அமெரிக்கா செல்ல இருக்கும் திரு. பத்மநாதன் அங்கு சர்வதேச வர்த்தகப் பட்டப் படிப்பை மேற்கொள்வார்.

1953ம் வருடத்தில் இலங்கை சிவில் சேவையில் சேர்ந்த இவர், 1965ம் வருடம் முதல் வர்த்தக இலாகாவில் உதவி டைரக்டராகக் கடமையாற்றிவருகிறார்.

## நீர்வேலி கி. ச. இடைத்தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், திங்

நீர்வேலிக் கிராமசபையின் நாலாம் வட்டார இடைத் தேர்தலில் திரு. எஸ். செல்லையா, 22 அதிகப்படியான வாக்குளால் வெற்றிபெற்றார். இவ்வட்டார அங்கத்தவராகவிருந்த திரு. சோதிலிங்கம் உள்ளூராட்சி மன்றத்தால் நியமனம்பெற்று மட்டக்களப்புக்குச் சென்றதினாலேயே இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது. ந. நி.

## சாராயத்தில் அழுக்குத்திரள்

யாழ்ப்பாணம். செவ்.

யாழ்ப்பாணம் சாராயத் தவறணையில் விற்கப்படும் சில சாராயப் போத்தல்களில் அழுக்கிருப்பதாக்க கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஒருவர் வாங்கிய சாராயப்போத்தலுக்குள் அழுக்குத்திரண்டு கட்டியாகவும், தூள்களாகவும் காணப்பட்டது. சாராயத்தை நிரப்புமுன் போத்தல்கள் நன்றாகச் சுத்தம் செய்யாத காரணத்தினாலேயே அழுக்குகள் இருப்பதாகக்கூறப்படுகிறது. [அ. நி]

## 'தெருச்சுற்றும் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சங்க விசேஷ கூட்டத்தில் ''குற்றச்செயல்களும் தடுப்பு வழியும்'' என்னும்பொருள் பற்றிப் பேசுகையில் வட பகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

மேற்படி கல்லூரி அதிபர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

படித்த பல வாலிபர்களும் வேலையின்றித் திரிவதாலேயே அவர்கள் இப்படியான குற்றச்செயல்களில் ஈடுபடவேண்டியுள்ளது. கெட்ட நண்பர்களுடன் சேர்வதையும் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு சைக்கிள்களில் தெருக்களைச் சுற்றுவதையும் வாலிபர்கள் அறவே கைவிடவேண்டும். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவைத் தொடர்ந்து தற்பொழுது நாடெங்கிலுமுள்ள பொலிசார் இப்படியான வாலிபர்கள் மீது அதிக கண்காணிப்புச் செலுத்திவருகின்றனர். பொதுமக்களும், பொலிசாரும், கல்லூரி ஆசிரியர்களும் இப்படியான வாலிபர்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பொலிசாருக்குத் தெரிவித்து அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும். இப்படிச் செய்வதனாலேயே நாட்டில் அதிகரிக்கும் குற்றச் செயல்களைப் பொலிசாரால் தடைசெய்ய முடியும். இதற்காகவே ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும்தற்பொழுதுபொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தகாத நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிசார் தயங்கமாட்டார்கள் என நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேற்படி கல்லூரி ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. விஜயரத்தினம் நன்றிதெரிவித்துப் பேசினார். [ந. நி]

முல்லைத்தீவு இராணுவ தாக்குதல் வழக்கு

## 2-வது, 3-வது குற்றச்சாட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டன

### இம்மாதம் 23-ல் தொடர்ந்து விசாரணை

முல்லைத்தீவு, திங்.

முல்லைத்தீவு இராணுவத்தில் உள்ள இராணுவச் சிப்பாயான கோவிலாம் பிள்ளை பாலச்சந்திரன் என்பவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த முருகேசு இராசையா, வீரகத்தி முருகேசு, கந்தையா பாலசுப்பிரமணியம் ஆகிய மூவரையும் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி இரவு அடித்துப் படுகாயம் விளைவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு கூட்டு நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது அப்போது வீரகத்தி முருகேசு என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி இரவு நான் எனது குடும்பத்தினருடன் வீட்டில் இருந்தேன். சுமார் ஏழரை மணிக்கு வீட்டில் லைட் வெளிச்சம் விழக் கண்டேன். உடனே 'யாரது' என்று கேட்டவண்ணம் படலையை திறந்து வெளியே சென்று பார்த்தேன். அப்போது எதிரியும் வேறுசிலரும் பிரான்சிஸ் வீட்டை நோக்கிச் செல்வதைக் கண்டேன். என்னைக் கண்டதும் எதிரி 'என்னடா வேணும்' என்று கேட்டார். பின்பு என் மனைவி, பிள்ளைகள் ஓடிவந்து என்னைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டனர். பின்பு நான் எனது மகன் இராசையாவையும், பாலசுப்பிரமணியத்தையும் உடனே போய் பொலிஸில் அறிவிக்கும்படி கூறினேன். இருவரும் பொலிசுக்குச் சென்று திரும்ப நேரமாகியதால் இருவரையும் தேடி நான் சென்றேன். பொலிசில் அப்போது இராணுவ ஜீப் ஒன்று நின்றது. மகன் இராசையாவையும், பாலசுப்பிரமணியத்தையும் கூட்டிக்கொண்டு நிஜாம் சினிமா வீதியால் சென்றேன். அப்போது இராணுவ ஜீப் எங்களை விலத்திக் கொண்டு போனதை நாம் கண்டோம்.

சாராயத்தவறணைக் கருகாமையில் நாங்கள் மூவரும் சென்ற போது ஒரு வாகனம் எம்மை நோக்கி வருவதைக் கண்டோம். அருகாமையில் வந்ததும் இராணுவ ஜீப் எனத் தெரிந்ததும். ஜீப் எமக்கு அருகாமையில் வந்ததும் நிறுத்தப்பட்டது. உடனே இராணுவச்சிப்பாய்கள் இறங்கினர். எதிரி இறங்கியதும் பலகை போன்ற ஓர் ஆயுதத்தால் மகன் இராசையாவை அடித்தார். மகன் உடனே 'ஐயோ' என்று கீழே விழுந்தார். பின்பு என் தலையில் அடிவிழுந்தது. பின்பு கந்தையா பாலசுப்பிரமணியம் சாட்சியமளித்தார். இக்கட்டத்தில் நீதிபதி எதிரியை 2-வது 3-வது குற்றச்சாட்டில் நிரபராதியாகக் கண்டிருப்பதாகக் கூறி முதலாவது குற்றச்சாட்டின்மீதான விசாரணையைத் தொடர்ந்தார்.

முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு சாட்சியமளிக்கையில், ''நான் முல்லைத்தீவுப்பொலிசாரின் வேண்டுகோட்படி 27-12-66-ந் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஓர் அடையாள அணிவகுப்பை நடத்தினேன். அப்போது முருகேசு இராசையா எதிரியான கோவிலாம் பிள்ளை பாலச்சந்திரனை அடையாளம் காட்டி அவர் தான் தன்னைத் தாக்கியதாகக் கூறினார். பின்பு கந்தையா பாலசுப்பிரமணியம் எதிரியை அடையாளம் காட்டி, அவர்வீட்டுக்குவந்தாரென்றும் ஆனால் அடித்தது யார் என்று தெரியாதென்றும் கூறினார். வீரகத்தி முருகேசுவும் எதிரியை அடையாளம் காட்டினார்.

பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. எம். ஈ. குரூஸ், பொலிஸ் சார்ஜண்ட் எஸ். சுப்பிரமணியம், சிறைப் பாதுகாவலர் கே. சந்திரசேகரம்பிள்ளை, ந. ஐயாத்துரை ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் மேல் விசாரணை இம்மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## வியாபாரநிலையமாக ...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

கந்தரோடை முன்பு பெரிய வியாபார நிலையமாக இருந்திருக்கலாமென்றும் பிறநாட்டவர்களும் இங்குவந்து பல பொருட்களை வாங்கிச் சென்றிருக்கலாமென்றும் புதைபொருளாராய்ச்சி இலாகா உத்தியோகத்தர் சிலர் கருத்து தெரிவித்தனர். [அ. நி.]

## பிரதமர்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் நடந்த கூட்டங்களில் தமிழ்அரசு, தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொண்டுபேசினர்.

பிரதமர் டட்லி சேனநாயகா தலைமையில் நடந்த ஒரு கூட்டத்தில் பிரதமர் பேசுகையில், இந்தநாட்டில் தேசிய ஐக்கியம் நிலைநாட்டுப்பட்டுவிட்டதென்பதற்கு இந்தக்கூட்டத்தில் சகல இன, மத மக்களும் கலந்துகொண்டிருப்பதே போதிய சான்று என்றார்.

இக்கூட்டத்தில் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தமிழில் பேசுகையில் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட முயற்சிசெய்வதுடன் இன, மத பாகுபடு இன்றி சகலரையும் சமமாக மதித்து நடத்தும் பிரதமர் டட்லீயின் தேசிய அரசாங்கத்தை மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## எம். பி. உறுதி

அச்சுவேலி, திங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனைச் சில்லறைக் கடை, பொலிஸ்நிலையம் ஆகியவற்றை அச்சுவேலியில் நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை அச்சுவேலி கிராமசபைக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org